தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை-6

ந.க.எண்.25154 / அ1 / இ2 / 2021 நாள். 03 .03.2022

பொருள்: பள்ளிக் கல்வி - 2021-22ம் ஆண்டு ஆசிரியர்கள் பொதுமாறுதல் சார்பான கலந்தாய்வு – நிருவாகக் காரணங்களுக்காக பள்ளிக் கல்வி ஆணையரக மாறுதல் கலந்தாய்வு மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகள் தற்காலிகமாக ஒத்தி வைத்தமை – மீள கலந்தாய்வு நடைபெறுதல் சார்பு.

பார்வை: 1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021

2)பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் இதே எண்ணிட்ட நாள்.30.12.2021, 06.1.2022, 07.1.2022 8.1.2022, 10.1.2022, 20.1.2022, 21.1.2022, 22.1.2022 மற்றும் 24.1.2022, 28.1.2022, 7.2.2022, 10.02.2022 14.2.2022 மற்றும் 23.2.2022

-0-

பார்வை-1ல் காணும் அரசாணையின்படி 2021-22ம் கல்வியாண்டிற்கு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு நெறிமுறைகள் சார்பாக ஆணை வெளியிடப்பட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் அரசாணையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாறுதல் கோரும் ஆசிரியர்கள் உரிய விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து கல்வி தகவல் மேலாண்மை இணையத்தில் (EMIS Online) பதிவேற்றம் செய்துள்ளனர். அதனடிப்படையில் மேற்படி ஆசிரியர்களுக்கு மாறுதல்கள், பதவி உயர்வுகள், பணிநிரவல் சார்பான கால அட்டவணை வெளியிடப்பட்டு (பதவி வாரியாக) கலந்தாய்வு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பார்வை-2ல் காணும் 14.2.2022 நாளிட்ட செயல்முறைகளில் பள்ளிக் கல்வி ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் அரசு / நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 15.2.2022 முதல் நடக்கவிருந்த மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வு நிருவாகக் காரணங்களுக்காக தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது பள்ளிக் கல்வி ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு / நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இணைப்பில் காணும் காலஅட்டவணைப்படி மாறுதல்கள் / பதவி உயர்வுகள் / பணிநிரவல் கலந்தாய்வுகள் நடைபெறவுள்ளது என்பதை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேற்கண்ட தகவலை தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேற்படி ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

02/03

**இணைப்பு:** திருத்திய காலஅட்டவணை

ஆணையருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(மின்னஞ்சல் மூலமாக)

3/3/2022

நகல்:

1.தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை–6

2. இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)

3. இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

4. இணை இயக்குநர் (தொழிற் கல்வி)

5. சம்பந்தப்பட்ட பிரிவுகள்

6. EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம் சென்னை–6

பள்ளிக் கல்வி ஆணையரகம்

2021–22ம் கல்வியாண்டிற்கு பொது மாறுதல் மற்றும் பதவி உயர்விற்கான திருத்திய கலந்தாய்வு அட்டவணை (பள்ளிக் கல்வி)

| வ எ | இயக்ககம் | பதவி | தற்போது திருத்திய புதிய கலந்தாய்வு நடைபெறும் நாள் & கிழமை |
|---|---|---|---|
| 1 | CoSE | அரசு/நகராட்சி முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை–1/ உடற்கல்வி இயக்குநர் நிலை–1/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 04.03.2022 வெள்ளி |
| 2 | CoSE | அரசு/நகராட்சி முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை–1/ உடற்கல்வி இயக்குநர் நிலை–1/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 05.03.2022 சனி |
| 3 | CoSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர்கள் / உ.க.இ நிலை–1 பதவி உயர்வு (PG & Phy.Dir.Gr.I Promotion) | 07.03.2022 திங்கள் |
| 4 | CoSE | அரசு / நகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர் நிலை–2 மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள் & மாவட்டம் விட்டு மாவட்டம்) | 09.03.2022 முப புதன் |
| 5 | CoSE | அரசு/நகராட்சி பள்ளி உடற்கல்வி இயக்குநர் நிலை–2 பதவி உயர்வு | 09.03.2022 பிப புதன் |
| 6 | CoSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள், கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 10.03.2022 வியாழன் |
| 7 | CoSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள், கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 11.03.2022 வெள்ளி |
| 8 | CoSE | அரசு/நகராட்சிப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பணிநிரவல் (BT Deployment–Tamil, English, Maths, Science, Social) வருவாய் மாவட்டத்திற்குள் | 14.03.2022 திங்கள் |
| 9 | CoSE | அரசு/நகராட்சிப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 15.03.2022 செவ்வாய் |
| 10 | CoSE | அரசு/நகராட்சிப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 16.03.2022 புதன் |

ஆணையருக்காக

3/3/2022